TAMIL NADU LEGISLATURE LIBRARY
23 FEB 1974
MADRAS

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

புதன்கிழமை, 1973 டிசம்பர் 5.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Writ Petitions filed in the Court by the Teachers.

* 201. Q.—Thiru S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of writ petitions filed in the courts by the teachers against the Education Department during the past five years; and

(*b*) among them, the number of writ petitions, in which the judgments were against the Government ?

ஆசிரியர்களால் நீதிமன்றங்களில் போடப்பட்ட "ரிட்டு"கள்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில், கல்வித் துறையை எதிர்த்து ஆசிரியர்களால் நீதி மன்றங்களில் போடப்பட்ட "ரிட்டு"கள் எத்தனை ?

(இ) இவற்றில் அரசுக்கு எதிராக தீர்ப்பானவை எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்வித் துறையை எதிர்த்து ஆசிரியர்களால் 156 ரிட்டுகள் நீதிமன்றங்களில் போடப்பட்டுள்ளன.

(இ) முடிவடைந்த 121 ரிட்டுக்களில் 15 ரிட்டுக்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த "ரிட்"களில் எத்தனை அரசுக்குச் சாதகமாகவும், எத்தனை ஆசிரியர்களுக்குச் சாதகமாகவும் முடிந்துள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மொத்தம் 156 ரிட்டுகள் போடப்பட்டன. 121 ரிட்டுகள் முடிவடைந்து விட்டன. இவற்றில் 15 ரிட்டுகள் அரசாங்கத்திற்கு எதிராகவும், மற்ற ரிட்டுகள் அரசாங்கத்திற்குச் சாதகமாகவும் முடிந்துள்ளன. 35 ரிட்டுகளில் இன்னும் முடிவு காணவில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த அரசுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்ட 15 ரிட்டுகளில் என்னென்ன பிரச்சினைகளில் ஆசிரியர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகியிருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றி முழு விவரம் இல்லை. இந்த "ரிட்"கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக ஆராயவேண்டும். 15 "ரிட்டு"களின் முழு விவரங்கள் சொல்லுவது என்பது முடியாது. தனிக் கேள்வி போட்டால், முழு விவரங்கள் தரமுடியும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இந்த "ரிட்"டுகளை அதிகமாகப் போட்டிருக்கிறார்களா அல்லது ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள் அதிகமாகப் போட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,பொதுவாக கல்வித் துறையை எதிர்த்து போடப்பட்ட "ரிட்"கள் என்ற முறையில் தான் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கவில்லை.

திரு. செ.முத்துசாமி : தலைவரவர்களே, இந்த "ரிட்டு"களில் கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து மட்டும் எத்தனை "ரிட்டு"கள் என்பதைச் சொல்ல முடியுமா? அவைகளில் அரசுக்கு எதிராக எத்தனை "ரிட்டு"களில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஜில்லா வாரியாகப் பிரித்துப் பார்க்கப்படவில்லை. தனிக்கேள்வி போட்டால், ஜில்லா வாரியாக உள்ள விவரங்களைக் கொடுக்க முடியும்.

Formation of an " Open " University.

* 202. *Q.*—Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thiru K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government are considering the formation of an " Open " University on the lines of the one functioning in the United Kingdom ?